# திராவிடத்தால் வாழ்கிறோம்

1164

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

55

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.



ஓவியம் : சிகரன்

# கல் வீச்சுக்கும் அஞ்சாத களப்போராளி!

இருகையூர், மீன்சுருட்டி, இராங்கியம், சாலப்பட்டி, உடையார்பாளையம் எனப் பல்வேறு பகுதிகளில் ஆசிரியராகப் பணி யாற்றியுள்ளார் வேலாயுதம். ஊர் மக்களுக்குக் கடிதம் எழுதிக்கொடுப்பது, பத்திரிகைகளைப் படித்து, அவர்களுக்குச் செய்திகளை எடுத்துச் சொல்வது, அரசு அலுவலகங்களின் செயல்பாடுகளை விளக்குவது, அரசு அலுவலகங்களில் பொதுமக்களுக்கு உதவிகள் தேவைப்பட்டால் இவரே உடன் சென்று உதவுவது என எண்ணற்ற பணிகளைச் செய்துவந்தார். இதற்காக 'கிராம மன்றம்' ஒன்றையும் ஏற்படுத்தினார். திருக்குறள் நூல்களைச் சிறிய அளவில் அச்சடித்து, தொடக்கப் பள்ளிகளுக்குச் சென்று விற்பார். பெரியாரின் 'குடிஅரசு', 'விடுதலை', அண்ணாவின் 'திராவிட நாடு' இதழ்களை ஊர் ஊராகச் சென்று விற்பனை செய்தார். இன்றைக்கும் லட்சக்கணக்கில் விற்பனையாகிக் கொண்டிருக்கும் 'பெண் ஏன் அடிமையானாள்?' என்கிற நூலைத் தன் சொந்தச் செலவில் வாங்கி மக்களிடையே பரப்பினார்.

'படிப்பை விட்டுவிட்டு உழவுப் பணிகளைப் பார்' என்ற பெற்றோரின் கடும் எதிர்ப்பையும் மீறி படித்து ஆசிரியரானவர். 30 கிலோ மீட்டருக்கு மேல் சைக்கிளில் சென்று படித்தவர். வீட்டில் பணம் தராவிட்டாலும், அரசு செய்த சிறுசிறு உதவிகளை வைத்தே கடும் சிரமத்துக்கு மத்தியில் படித்தவர். கூடவே பெரியார் மீதான பற்றும் இருந்ததால், கல்வியின் முக்கியத்துவத்தை, பொதுமக்களுக்குப் புரியவைத்து, அனைவரையும் படிக்கவைக்க எண்ணற்ற உதவிகளைச் செய்தார். கிழிந்த ஆடைகளுடன் மாணவர்கள் பள்ளிக்கு வந்தால், அவர்களுக்குத் தன் செலவிலேயே புதிய ஆடைகள் வாங்கிக் கொடுப்பார். கடும் பசியோடு வகுப்பறையில் மாணவர்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்தால், தன் வீட்டுக்கு அனுப்பி, மனைவி ஜெகதாம்பாளிடம் அவர்களுக்கு உணவு கொடுக்கச் சொல்வார். அவர்கள் மேல்படிப்பைத் தொடர உதவிகள் செய்தார். மாணவர்கள் தங்கிப் படிக்க, தன் வீட்டையே கட்டணமில்லாமல் அவர்களுக்குக் கொடுத்து உதவினார். இதனாலேயே, வேலாயுதம் இடமாறுதல் அடைந்து வேறு பள்ளிக்குச் செல்லும் போதெல்லாம், மாணவர்கள் அவரைக் கட்டியணைத்து அழுவர்.

அத்தகைய 'மக்கள் ஆசிரியரா'கத் திகழ்ந்த வேலாயுதம், உடையார் பாளையத்தில் பணியாற்றும்போது எண்ணற்ற சமூகப் புரட்சிகளையும் செய்துள்ளார். அங்கு அவர் பணியாற்றி வந்த பள்ளி, சிவன் கோயில் தெருவில் இருந்தது. தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அத்தெரு வழியாகப் பள்ளிக்கு வரக்கூடாது என்று அங்கிருந்த பார்ப்பனர்கள் தடைபோட்டு வைத்திருந்தனர். உடையார்பாளையம் கடைவீதியில் இக்கொடுமையை எதிர்த்துக், கூட்டம் போட்டுப் பேசினார் வேலாயுதம். நாளை அத்தெரு வழியாகத் தாழ்த்தப்பட்ட மாணவர்களை அழைத்துச் செல்வேன் என்றும் அறிவித்தார். இதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், மறைந்திருந்த சிலர் அவர்மீது கல் வீசித் தாக்கினர். ஆனால், அதைக் கண்டெல்லாம் அஞ்சாமல் மறுநாள் சொன்னபடியே செய்துகாட்டினார். அதன்பிறகு, அப்பகுதியில் இருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் பெருமளவு தங்கள் குழந்தைகளைப் படிக்க அனுப்பினர்.

பள்ளிகளில் ஆதிக்கச் சாதியினருக்கு ஒரு இடம், இடைநிலைச் சாதியினருக்கு ஒரு இடம், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குத் தனி இடம் என்றெல்லாம் நிலவிய கொடுமை களைத், தான் பணியாற்றிய அனைத்து இடங்களிலும் அறவே ஒழித்துக்கட்டினார்.

...பயணம் தொடரும்

## கல்வி உரிமையைத் தடை செய்யத் துடிக்கும் ஆர்.எஸ்.எஸ்!

இந்தியாவில் செயல்பட்டு வரும் கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்களைக் குறிவைத்து, வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு ஒழுங்குமுறை (FCRA) மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது ஒன்றிய அரசு.

'கிறிஸ்தவ நிறுவனங்களை முற்றாக ஒழித்துக்கட்டத் துடிக்கும் இந்த மசோதாவைத் திரும்பப் பெற வேண்டும் என்று, தமிழ்நாடு முதலமைச்சர் தனது தேர்தல் பரப்புரையில் வலியுறுத்தி வருகிறார். இந்தியா முழுவதும் இந்த மசோதாவுக்கு கடும் எதிர்ப்புகள் எழுந்துள்ளன.

இதுதொடர்பாக, திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதியுள்ள பதிவில், "இந்த மசோதா அமலுக்கு வந்தால், வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து நிதி பெறுவது தடுக்கப்படும் என்பது மட்டுமல்ல; அந்த நிதி உதவியோடு நடத்தப்படும் மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், தேவாலயங்களை அரசு தானாகவே கைப்பற்றிக் கொள்ள முடியும். இதில் நீதிமன்றங்கள் தலையிட முடியாது. அடிப்படை உரிமைகளையே முடக்கும் இந்தக் கொடூரமான சட்டம், வேத பார்ப்பனியம் 'சூத்திர பஞ்சமர்களின்' கல்வி உரிமையைத் தடை செய்ததற்கு ஒப்பானது.

இந்தியாவில் பள்ளிக் கல்வி முறையை அறிமுகப்படுத்தியது பிரிட்டிஷ் அதிகாரி மெக்காலே என்ற கிறிஸ்தவர்தான். ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் கல்வி நிலையங்களைத் திறந்தது கிறிஸ்தவ நிறுவனங்கள்தான். குறிப்பாக, தமிழ்நாட்டில் கிறிஸ்தவ நிறுவனங்கள் நடத்தும் மருத்துவமனைகள் மிகச் சிறந்த சேவைகளை வழங்கி வருகின்றன. சங்கிகளுக்கு இந்தச் செயல்பாடுகள் எரிச்சல் ஊட்டுகின்றன.

அதே நேரத்தில், எந்த ஒரு சட்டத்தின் கீழும் பதிவு செய்யப்படாமல் 100 ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் பல நிறுவனங்களுக்கு அயல்நாடுகளில் இருந்து நிதி குவிந்துவருகிறது. இதற்கு எந்தத் தடையும் இல்லை. மோடி ஆட்சியில் ஏற்கெனவே பல கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்களுக்கு வெளிநாட்டு நிதி நிறுத்தப்பட்டதால் பல நிறுவனங்கள் முடங்கிவிட்டன. இப்போது, கிறிஸ்தவ நிறுவனங்களின் பதிவுகளை ரத்து செய்யவும் உடைமைகளைப் பறிமுதல் செய்யவும் துடிக்கிறார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

105

''கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''



# போலி முழக்கங்களுக்கு புள்ளிவிவரங்களே சாட்சி!

***'தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு அதிக கடன் வாங்கும் மாநிலமாக ஆகிவிட்டது' என்று ஒன்றிய பா.ஜ.க. அமைச்சரும், அ.தி.மு.க. கூட்டணியில் பஞ்சாயத்து செய்பவருமான பியூஷ் கோயல் பேட்டி அளித்திருக்கிறாரே?***

தமிழ்நாட்டின் நிலையைப் பார்த்தீர்களா என்று முதலைக் கண்ணீர் வடிக்கும் பியூஷ் கோயல், அவர் பங்கேற்றுள்ள பிரதமர் மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் இந்தியாவின் கடன் நிலை என்ன என்பதை விளக்கியிருந்தால், நன்றாக இருந்திருக்கும். 2014-ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில், இந்திய ஒன்றிய அரசின் கடன் 53.11 இலட்சம் கோடியாக இருந்தது. அதன்பின் கடந்த 12 ஆண்டுகளில், மோடியின் ஆட்சியில் இந்தியாவின் கடன்தொகை ரூ.218 இலட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. அதாவது, பிரதமர் மோடி ஆட்சிக்கு வந்த பிறகு வாங்கியுள்ள கடன் மட்டும் ரூ.165 இலட்சம் கோடி. 'இந்தியாவைக் கடன்கார நாடாக்கி விட்டார் மோடி!' என்று நாம் திருப்பிக் குற்றம் சாட்டினால், ஒப்புக்கொள்வாரா பியூஷ் கோயல்?

ஒரு நாடு அல்லது மாநிலம் தனது வளர்ச்சித் திட்டங்களுக்காக வாங்கும் கடனை, நிதிச்சுமையாக மட்டும் பார்க்கக்கூடாது. அந்தக் கடன் எதற்காக-எந்த விதத்தில் செலவிடப்படுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். தமிழ்நாடு என்பது இந்தியாவில் வளர்ச்சி பெற்ற மாநிலங்களில் முதன்மை நிலையில் உள்ளது. இந்திய மாநிலங்களில் 11.19% என்கிற இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சி கொண்ட ஒரே மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது.

திராவிட மாடல் ஆட்சியின் இந்தச் சாதனையை, ஒன்றிய பா.ஜ.க அரசின் துறைகள் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களே தெரிவிக்கின்றன. மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அடிப்படையில், இந்தக் கடன் அளவு 28.7% ஆகும். இதே அளவுகோலின்படி பார்த்தால், பா.ஜ.க. ஆளும் உத்தரப்பிரதேசத்தின் கடன் அளவு 29.4% ஆகும்.

தமிழ்நாட்டில் அ.தி.மு.க ஆட்சியில் 2011-16 காலகட்டத்தில் வாங்கப்பட்ட கடன் அளவு என்பது அதற்கு முந்தைய தி.மு.க. ஆட்சிக்காலத்துடன் ஒப்பிட்டால், 108% அதிகமாகும். 2016-2021 வரையிலான அ.தி.மு.க. ஆட்சியில் வாங்கப்பட்ட கடன் அளவு 128% என்ற அளவில் உயர்ந்தது. 5 ஆண்டுக்கால தி.மு.க. ஆட்சியில் வாங்கப்பட்ட கடன் 93%தான். இதில், அ.தி.மு.க. அரசு வாங்கிய கடனுக்காக 1.40 இலட்சம் கோடி ரூபாயை வட்டியாகக் கட்டியுள்ளது தி.மு.க. அரசு.

ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் நிலையிலும், கடன் அளவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்து, பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டு, அனைத்து மக்களுக்குமான நலத்திட்டங் களையும், மாநிலத்திற்கான வளர்ச்சித் திட்டங் களையும் நிறைவேற்றி வருகிறது. பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டிற்குரிய வரிப்பங்கீட்டை ஒழுங்காகவும் உரிய காலத்திலும் வழங்கினாலே, தமிழ்நாட்டின் 9 இலட்சம் கோடி ரூபாய் கடனில் மூன்றில் ஒரு பங்கான 3 இலட்சம் கோடி ரூபாய் கடன்சுமை குறையும். பியூஷ் கோயலும் அவருடன் ஒட்டு கேட்டு வருகிற வடமாநில பா.ஜ.க. தலைவர்களும் மோடியிடமும் நிர்மலா சீதாராமனிடமும் தமிழ்நாட்டிற்குரிய நிதியை முறையாக வழங்கிட வழிசெய்துவிட்டு, அதன்பிறகு, தமிழ்நாட்டின் கடன் பற்றி ஓரமாக உட்கார்ந்து கவலைப்படலாம்.

...வினா தொடரும்.

## ஃப்ளாஷ்பேக்





ரா.ஸ்ரீதரன்

### தலைவரைச் சந்தித்து மகிழ்ந்தேன்!

2014-ஆம் ஆண்டு, நம் தானைத்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றது, என் வாழ்நாள் பெருமையும் மகிழ்ச்சியும். தலைவரிடம் தேர்தல் நிதி கொடுத்து மகிழ்ந்த தருணம்.

- ரா.ஸ்ரீதரன்,
முன்னாள் வட்டப் பிரதிநிதி,
77-வது வார்டு, மதுரை மாநகர்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### தொடர் போராட்டம்!

1956-ஆம் ஆண்டு ஜனவரி 29-ஆம் தேதி, சிதம்பரத்தில் கூடிய பொதுக்குழு, திருச்சியில் இரண்டாவது மாநில மாநாட்டை மே மாதத்தில் நடத்துவதற்கான தேதிகளை முடிவுசெய்தது. பொதுக்குழு முடிந்து, தொடர்ச்சியாக மே மாதம் முதல் வாரம் வரை எல்லைப் போராட்டச் சிக்கல்களும், தட்சிணப் பிரதேசத் திட்டம் குறித்த போராட்டங்களிலும் தொடர்ச்சியாகக் கழகம் ஈடுபட்டிருந்தது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900